www.Padasalai.Net www.CBSEtips.in

V12His

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 12

வரலாறு

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2) "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" எனக் கூறியவர்
அ) பால கங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்

3) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம் ஈ) பால கங்காதர திலகர்

4) கூற்று : வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
காரணம் : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

5) பனாரஸ் இந்துப்பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

6) பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.
அ) கதார் கட்சி - i) 1916
ஆ) நியூ இந்தியா - ii) 1913
இ) தன்னாட்சி இயக்கம் - iii) 1909
ஈ) மிண்டோ - மார்லி சீர்திருத்தம் - iv) 1915
அ) ii, iv, i, iii ஆ) iv, i, ii, iii இ) i, iv, iii, ii ஈ) ii, iii, iv, i

7) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

8) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

9) 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுயராஜ்ய கட்சி ஆ) கதார் கட்சி இ) சுதந்திரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

10) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம்
ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே
ஈ) கொல்கத்தா - ஹூக்ளி

11) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

12) இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டுவந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர்ஹசன்

13) மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

14) சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் எங்கு ஏற்படுத்தினார்?
அ) இரங்கூன் ஆ) மலேசியா இ) இம்பால் ஈ) சிங்கப்பூர்

15) மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்
அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

16) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிசா

17) பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



V12His

18) பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ............. இல் நடைபெற்றது.
அ) 1775 ஆ) 1773 இ) 1784 ஈ) 1799

19) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் .......... ஆவார்.
அ) யாமமோட்டோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிடோ

20) ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24 இல் ............... உருவானது.
அ) 100 உறுப்பினர்களுடன் ஆ) 72 உறுப்பினர்களுடன்
இ) 51 உறுப்பினர்களுடன் ஈ) 126 உறுப்பினர்களுடன்

## பகுதி - II

**7×2=14**

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
22) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
23) பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
24) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிகைகளின் பெயர்களைக் கூறுக.
25) தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
26) இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
27) இந்தியாவின் 'நவீன தொழிற்சாலையின் தந்தை' என ஜே.என். டாடா அழைக்கப்படக் காரணம் என்ன?
28) அரசமைப்பின் ஷரத்து 370ன் முக்கியத்துவம் என்ன?
29) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
30) ரோம்-பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?

## பகுதி - III

**7×3=21**

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.
32) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
34) மாற்றத்தை விரும்புபவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.
35) 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
36) இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
37) இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
38) மிக ஆபத்தான U-படகுகள் மற்றும் Q-கப்பல்கள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
39) இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
40) காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்?

## பகுதி - IV

**7×5=35**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) இந்திய தேசிய காங்கிரஸ் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்பகால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.
**(அல்லது)**
ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

42) அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக. **(அல்லது)**
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.

43) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.
**(அல்லது)**
ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

44) அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக. **(அல்லது)**
ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

45) அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது? **(அல்லது)**
ஆ) முதல் உலகப் போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

46) அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
(i) சென்னை (ii) பம்பாய் (iii) டெல்லி (iv) வேதாரண்யம் (v) கல்கத்தா

47) அ) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்? **(அல்லது)**
ஆ) 1900 முதல் 1950 வரையிலான காலக்கோடு வரைந்து, இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை குறிப்பிடுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com